NOOLAHAM
FOUNDATION

# Nool Theddam Digital Catalogue Project
# 2020

www.noolahamfoundation.org

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | Nool Theddam Digital Catalogue |
| செயற்றிட்ட எண் | NF/PG/2020/0084 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்ட காலம் | 2020 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | என். செல்வராஜா<br>தில்லைநாதன் கோபிநாத்<br>அகிலன் பூபாலசிங்கம் |
| பாதீடு | 220,000 |

## நூலக நிறுவனம்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. அத்துடன் பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளையும் நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

## செயற்றிட்டச் சுருக்கம்

நூல்தேட்டமானது ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான நூல் விபரப் பட்டியலாகும். இதில் ஈழத்துத் தமிழ்மொழி எழுத்தாளர்களினதும் வெளியீட்டாளர்களினதும் நூல்கள் பற்றிய நூலியல் குறிப்புக்களும் அதனையடுத்து நூல் பற்றிய சில அறிமுகக்குறிப்பும் இடம்பெற்றுள்ளது. இவ் விபரங்களை எமது ஆவணக வலைத்தளத்தில் இணைப்பதே நூல்தேட்டம் செயற்றிட்டமாகும்.

## அறிமுகமும் பின்புலமும்

நூல்தேட்டம் இலங்கை எழுத்தாளர்களினதும், புலம்பெயர்ந்து வாழும் ஈழத்து எழுத்தாளர்களினதும் நூல்களை ஆவணப்படுத்தும் நூல் வரிசை ஆகும். இலங்கையின் யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது புலம்பெயர்ந்து ஐக்கிய இராச்சியத்தின் 'லூட்டன்' நகரை வசிப்பிடமாகக் கொண்டவருமான நூலகவியலாளர் ந. செல்வராஜா நூல் தேட்டம் தொகுப்புக்களை 2002 முதல் வெளியிட்டு வருகிறார்.

19ம் நூற்றாண்டின் மத்திய பகுதியிலிருந்து இன்றைய காலகட்டம் வரை பல ஆயிரக்கணக்கான தமிழ்மொழி நூல்கள் இலங்கை எழுத்தாளர்களால் வெளியிடப்பட்டுள்ளன. இத்தகைய நூல்களைப் பற்றி முறையான பதிவுகள் இதுவரை

பேணப்படவில்லை. இதனைக் கருத்திற்கொண்டு இலங்கை எழுத்தாளர்களினால் இலங்கையிலும், புலம்பெயர் நாடுகளிலும் அச்சுருவில் வெளியிடப்பட்ட நூல்கள் பற்றிய விபரங்களை ஆவணமாக்குவதே நூல்தேட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இது ஒரு தேர்ந்த நூற்பட்டியலன்று. இங்கு பட்டியலாக்கப்பட்டுள்ள தனி நூல்கள் (Monographs) எவையும் எவ்வித தரக்கட்டுப்பாட்டுக்கும் உட்படுத்தப்படுவதில்லை. பெற்றுக் கொள்ளக்கூடிய ஈழத்துத் தமிழ் நூல்கள் அனைத்தையும், ஒரு தொகுதிக்கு 1000 நூல்கள் என்ற எண்ணிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

வெளியீட்டின் பௌதீகத்தன்மை கருதி சில பிரசுரங்கள் நூல்தேட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டில்லை. துண்டுப்பிரசுரங்கள், வரைபடங்கள், அச்சிடப்படாத கையெழுத்துப் பிரதிகள், ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள், இறுவெட்டுகள் என்பன இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டில்லை. பெரும்பான்மையான கல்வெட்டுகள், ஞாபகார்த்த மலர்கள், சஞ்சிகைகள் என்பனவும் இத்தொகுதியில் தவிர்க்கப்பட்டுள்ளன.

ஆயினும், தனி ஆவணமாகக் கருதும் வகையில் வெளியிடப்பட்டிருக்கும் சஞ்சிகைகளின் சிறப்பு மலர்கள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. மேலும், சில கல்வெட்டுக்களும், ஞாபகார்த்த மலர்களும் தனிநூலின் வகைக்குள் அடங்கக்கூடியதான கனதியான அம்சங்களுடன் வெளிவந்திருப்பதால் அவையும் இத்தொகுதியில் சேர்த்துக் கொண்டுள்ளன.

## இலக்குகளும் நோக்கங்களும்

என்.செல்வராஜா அவர்களது நூல்தேட்டங்களை ஆவணப்படுத்தல்.

## செயற்பாடுகள்

- நூல்தேட்டத்தில் குறித்த இலக்கத்தில் காணப்படுகின்ற புத்தகத்தின் தலைப்பினை அவ் நூல்தேட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறே எழுத வேண்டும். அவ் தலைப்புக்களில் உப தலைப்பு இருந்தால் : என்ற குறியீட்டினை பயன்படுத்தி தலைப்பினை எழுத வேண்டும்.
- குறித்த புத்தகத்தினுடைய எழுத்தாளர் விபரங்களை பதிய வேண்டும்.
- நூலக வலைத்தளத்தினில் எழுத்தாளரின் பெயர் எழுதும் ஒழுங்கில் நூல் தேட்டத்தில் குறித்த விபரங்களை இடல்.

## அடைவுகள்

- 11,000 இற்கு மேற்பட்ட நூல் விபரங்கள் அடையப்பெற்றமை.
- என். செல்வராஜாவின் 11நூல்தேட்டம் எண்னணிமப்படுத்தப்பட்டன.

## எதிர்கொண்ட சவால்கள்

- நூல் தேட்டத்தின் தட்டெழுதப்பட்ட பிரதி இன்மை பெரும் சவாலாக அமைந்தது.

- பெயரிடுதலில் ஏற்பட்ட இடர்பாடுகள் (எழுத்தாளர்கள் ,இதழ்களின் பெயர்கள் மீள மீள காணப்பட்டமை)
- துறைசார் அனுபவம் குறைவாகக் காணப்பட்டமை

**<u>கற்றல்களும் பரிந்துரைகளும்</u>**

- நூலகவியற் கல்வி அல்லது அனுபவம் உள்ளோரைக் கொண்டு செயற்படுத்தப்பட்டால் இச்செயற்றிட்டத்தை ஓரளவு இலகுவாக முன்னெடுக்கலாம்.
- மெய்ப்பிரதிகளைக் கண்டறிதல் வேண்டும்
- இச்செயற்றிட்டம் தொடர்பான விடயங்களை முழுமையாக செய்ய வேண்டும்.
- நூலகம், நூல்தேட்டம் ஆகியவற்றின் ஆவணங்களை சமநிலைப்படுத்தவேண்டும்
- Meta Data Sheet இல்
- பதிவுகளை உரிய முறையில் பதிவிடல்